

திருவெண்ணைநல்லூர் மேற்கு ஒன்றியம் மாவட்டப் பிரதிநிதி எஸ்.ஆர்.ஒய். மோகன்ராஜ் மற்றும் சிறு வானூர் ஊராட்சி மன்றத் தலைவர் பாரதி மோகன்ராஜின் புதிய பெட்ரோல் பங்கை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியும் திருமதி விசாலாட்சி பொன்முடியும் கலந்து கொண்டு திறந்து வைத்து வாழ்த்தினர். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பொதுக்குழு உறுப்பினர் பக்தவத்சலம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நாகப்பட்டினம், சௌந்தரராஜப் பெருமாள் திருக்கோயிலின்

# மூலவர் விமானத்திற்கு தங்க ரேக்குகள் பொருத்த 8 கிலோ தங்கம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபுவிடம் உபயதாரர்கள் வழங்கினர்!

நாகை, ஜன.5-

நாகப்பட்டினம், அருள்மிகு சௌந்தரராஜப் பெருமாள் திருக்கோயிலின் மூலவர் விமானத்திற்கு தங்க ரேக்குகள் பொருத்தும் பணிக்கு 8 கிலோ தங்கக் கட்டிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபுவிடம் வழங்கினர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (03.01.2025) ஆணையர் அலுவலகத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம், சௌந்தரராஜப் பெருமாள் திருக்கோயில் மூலவர் விமானத்திற்கு செப்பு தகடு வேய்ந்து தங்க ரேக்குகளை பொருத்தும் பணிகளுக்கு உபயதாரர்கள் ஆர்.ஹரி மற்றும் ஆர்.குகன் ஆகியோர் 8 கிலோ 405 கிராம் எடையுள்ள தங்கக் கட்டிகளை வழங்கினர். அதனை பெற்றுக் கொண்ட அமைச்சர் திருப்பணிகளை மேற்கொள்ளும் வகையில் தங்கக் கட்டிகளை நாகப்பட்டினம் மண்டல இணை ஆணையர் வி.குமரேசன் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர் வீரவிநாயக ஜெயந்த் ஆகியோரிடம் ஒப்படைத்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத்துறையில் பல்வேறு புதிய திட்டங் களும், சேவைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு ஆன்மிகப் பெரியோர்கள் மற்றும் பக்தர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்று வருகிறது. தமிழ்நாடு முழுவதும் பல்வேறு திருக்கோயில்களில் ரூ.5,487 கோடி மதிப்பீட்டில் 21,908 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் உபயதாரர்கள் ரூ.1,185 கோடி மதிப்பீட்டிலான 9,491 பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இது அரசின் மீதும், இந்து சமய அறநிலையத்துறையின் மீதும் உபயதாரர்கள் கொண்டுள்ள நன்மதிப்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. திருக்கோயில்களுக்கு வர வேண்டிய வாடகை மற்றும் குத்தகை நிலுவைத் தொகை ரூ.936.80 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. 3,750 கிராமப்புறத்திருக்கோயில்களுக்கும், 3,750 ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களுக்கும் திருப்பணி மேற்கொள்ள தலா ரூ.2 இலட்சம் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

**2363 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு!**

கடந்த மூன்றரை ஆண்டுகளில் 2,363 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, 930 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.7,104 கோடி மதிப்பிலான 7,283.75 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இது திராவிட மாடல் ஆட்சியின் சாதனையாகும். திருச்செந்தூர், பழனி, சமயபுரம், இராமேசுவரம், திருவண்ணா மலை, திருத்தணி, பெரியபாளையம், அழகர்கோவில், மருதமலை, சிறுவாபுரி, மேல்மலையனூர் போன்ற 17 திருக்கோயில்களில் பெருந்திட்ட வரைவின் கீழ் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்திடும் வகையில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தாண்டு கன்னியாகுமரி பகவதி அம்மன் திருக்கோயில் போன்ற திருக்கோயில்கள் பெருந்திட்ட வரைவின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும்.

திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களை உருக்கி தங்க முதலீட்டு திட்டத்தில் முதலீடு செய்யும் திட்டத்தின்கீழ் இதுவரை 14 திருக்கோயில்களின் 472 கிலோ 703 கிராம் சுத்தத் தங்கம் பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 8 திருக்கோயில்களுக்கு சொந்தமான 776 கிலோ 272 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்கள் உருக்குவதற்காக மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2025 ஆண்டு இறுதிக்குள் 1,000 கிலோ சுத்த தங்கக் கட்டிகளை வைப்பு நிதியாக முதலீடு செய்வோம். முடங்கி கிடந்த தங்க முதலீட்டு திட்டத்தை முடுக்கி விட்டு திருக்கோயில்களுக்கு வருவாயை ஈட்டித் தந்தவர் முதலமைச்சர் அவர்கள்.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயிலானது 19 வது திவ்ய தேசமாகும். இத்திருக் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்திட ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற 2025 பிப்ரவரி 2 ஆம் நாள் குடமுழுக்கு நடைபெற வுள்ளது. இத்திருக்கோயிலின் மூலவர் விமானத்தை தங்க விமானமாக அமைத்திடும் வகையில் தங்க ரேக் ஒட்டும் பணிகளுக்கு உபயதாரர் மருதப்ப செட்டியார் சார்பில் அவரது பேரன்கள் ஆர்.ஹரி மற்றும் ஆர்.குகன் ஆகியோர் ரூ.6.32 கோடி மதிப்பீட்டில் 8 கிலோ 405 கிராம் 268 மில்லி கிராம் எடையுள்ள தங்கக் கட்டிகளை வழங்கியுள்ளார்கள். உபயதாரர்களுக்கும், இதனை பெற்றுத்தர உதவியாய் இருந்திட்ட நாகை முகுந்தன், பட்டாச்சாரியர்கள் ஸ்ரீராம், பாலாஜி, ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோருக்கும் துறையின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் பொ.ஜெயராமன், திருமதி கோ.செ.மங்கையர்கரசி, திருமதி இரா.வான்மதி, வி.குமரேசன், துணை ஆணையர் திருமதி பி.ராணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி. சிட்டிபாபு
**சனவரி 5 (1977)**



தியாக மறவன் – கொள்கைக் குன்று – அண்ணா பெரும்படையின் அருந்தொண்டன் – தலைவர் கலைஞர் உடன் நின்று கழகப் பணியாற்றிய தோழன்.

சென்னை மாநகராட்சியின் மேயர், இருமுறை மக்களவை உறுப்பினர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், ‘கழகக்குரல்’ ஆசிரியர் உள்ளிட்ட பொறுப்புகளையேற்று சிறப்பாகப் பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்புக்குப் பாத்திரமானவராகத் திகழ்ந்தார்.

நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக இருந்தபோது சிறைக் காவலர்கள் தாக்கியதில் படுகாயமுற்று மரணமடைந்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# வைக்கப்படுவார்!

### ‘கணையாழி’ தலையங்கம்!



புத்தாண்டுப் பொங்கலோடு
முத்தமிழறிஞர் கலைஞரின்
கனவுக்குப் பொன்விழா!
அவர் எடுத்த
அய்யன் வள்ளுவர் சிலைக்கு
வெள்ளி விழா!
கொண்டாடுகிற
முதல்வரை வாழ்த்துவோம்!

திருவள்ளுவர் சிலை
இப்போதும் திருவள்ளுவரோடு
கலைஞர் நடத்தும் உரையாடல்!
அமைதிக் கவிதை!

திருவள்ளுவர் சிலை
பாறையைக் குடைந்து அல்ல
பாறை மேல் நிற்கிறது!

முப்பால் தந்த
திருவள்ளுவருக்குத்
தமிழ் நாட்டின்
மூன்று இடங்களில் இருந்தும்
வெட்டியெடுக்கப்பட்ட
வெட்டுக்கல்லில் சிலை!

அம்பாசமுத்திரக் கல்லில்
அடித்தளம், அறம்!
அதற்கும் மேலே
பொருளும் இன்பமுமாக
காஞ்சிபுரத்திற்கு அருகில் இருக்கும்
சிறுதாமூர், பட்டுமலைக் குப்பம் கற்கள்!

திருவள்ளுவர் சிலை
தஞ்சாவூர்ப் பெரிய கோயிலைப் போல
கடலில் நிற்கும் கோபுரம்!

திருக்குறள்!
திருவள்ளுவரின் மூச்சுக் காற்று
உலக மானுட ஆவணம்!

திருவள்ளுவர் சிலை
கேட்டுக் கொள்ளும் மனதுடையோர்க்கு
ஆர்ப்பரிக்கும் கடலில் நின்று
மூன்று விரல் காட்டி
தமிழ்ச் சிந்தனையை விளக்கும்
மௌனக் கதை சொல்லி!

அந்தச் சிலை
திருவள்ளுவருக்கு மட்டும் இல்லை
சிந்தனைக்கும் மரியாதை!

திருவள்ளுவர்
தமிழ் ஞானமரபின் அடையாளம்!
நிழலின் நிஜம்!

திருக்குறள்
தமிழ்ச் சிந்தனைகளின் கருவூலம்!
கால அலைகளால் கலைக்க முடியாத
தமிழ் உலகின் விடியல்!

மானுட வாழ்க்கையின்
சாரமும் ஈரமும்!
கனவுகளின் உரைமுகம்!
காலத்தின் உறைவிடம்!
இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும்
முற்பட்ட சிந்தனையோடு
காலம் நடத்திக் கொண்டிருக்கும்
கலந்துரையாடல்!
காலத்தின் அணிகலன்!
உலக நீதிக்கு
வழிகாட்டும் நடைமுறை!
மதம் கடக்கும் ஞானம்!

சிலை என்பது
பாறையின் மறுபெயர் இல்லை.
அது
உளி எழுது கோலால்
உருவாகும் காவியம்!
தலைமையைப் போலவே
உளி விழுப் புண்களால்
உருவாகும் ஓவியம்!

சிலையில் தெரிவது
நிற்கிற கல் மட்டுமில்லை
அது
சிலையாக உருவாகக் கழிக்கப்பட்ட
சில்லுகளின் தியாகமும் தான்!

சிலை
காலத்தைக் கடந்து நிற்கும்
உழைப்பு!
மனிதர்கள்
சாதனை படைக்கத் தூண்டும்
உந்து சக்தி!

“வைக்கப்படும்” என்ற ஒரே சொல்லை
நான்கு திருக்குறளில்
இடம் பெறச் செய்திருக்கிறார்
திருவள்ளுவர்!

அவற்றுள்
“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்’

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்” என்ற
இரண்டு திருக்குறளும்
கூடுதல் கவனத்திற்கு உரியன!
வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் என்பதில்
வாழ்பவன் என்பது இப்போதும்
வாழ்ந்து கொண்டிருப்பவர் என்று
நிகழ்காலப் பொருளைத் தருகிறது!
சமுதாயம் வாழ
வாழ்ந்து மறைந்தவர்களுக்கு
நடுகல் வைத்துக் கொண்டாடுவது மரபு!
ஆனால் திருவள்ளுவர்
வாழ்ந்து கொண்டிருப்பவர்களும்
தெய்வமாக
வணங்குதற்கு உரியவர்கள் என்று சொல்கிறார்!
அப்படியானால்
மறைந்த பிறகும் சமுதாயம் வாழ
வழிகாட்டிக் கொண்டிருப்பவர்கள்
புகழ் உடம்பில்
எப்போதும் வாழ்கிறார்கள்
திருவள்ளுவரைப் போல!

அதனால்தான் வள்ளுவர்
‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்” என்று
நிகழ் காலத்தில்
சொல்லியிருக்கிறார் போலும்!

மூன்று கடல்களையும் இணைக்கிற
முப்பால் நாயகனோடு
கண்ணாடிப் பாலத்தால்
காலத்தையும் விவேகானந்தரையும்
சேர்த்திருக்கிறார் முதலமைச்சர்!
அப்போது வாழ்த்துச் சொல்ல
வந்து நின்றது மழையும்!

திருக்குறள் சொல்கிறது
அப்படி உரியவர்களுக்கு
முறை செய்து
மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரே
காலத்தின் எல்லை கடந்தும்
மக்கள் மனதில் நிற்கும்படி
தலைவர் என்று வைக்கப்படுவார்!!



**அன்புடன்**
**ம.ரா.**

நன்றி : ‘கணையாழி’